THILLAI MAIL

19 NOV 2022

PAGE 8

தில்லை மெயில்

# பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் நாட்டின் வரலாற்றில் பழங்குடியினர் பங்களிப்பை நினைவுகூரும் நிகழ்ச்சி

புதுச்சேரி, நவ.19–

பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தில் கடந்த 15ம் தேதி 2வது ஜன்ஜாதிய கவுரவ் திவாஸை நாட்டின் வரலாறு மற்றும் கலாச்சாரத்திற்கு பழங்குடி சமூகங்களின் பங்களிப்பை நினைவுகூரும் வகையில் அனுசரிக்கப்பட்டது. அனைத்து பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரர்களையும் கவுரவிப்பதற்கும், பழங்குடியினப் பகுதிகளின் சமூகபொருளாதார வளர்ச்சிக்கான முயற்சிகளை மீண்டும் வலுப்படுத்தவும் இந்த நாள் அனுசரிக்கப்பட்டது.

நவம்பர் 15 புகழ்பெற்ற சுதந்திரப் போராட்ட வீரரும், பழங்குடியினத் தலைவருமான தர்தி அபா, பகவான் பிர்சா முண்டாவின் பிறந்தநாள் ஆகும். நிகழ்வின் சிறப்பம்சமாக பேச்சு,




வினாடிவினா, ஓவியப் போட்டி, கலாசார நிகழ்ச்சிகள், புகைப்படக் கண்காட்சி போன்றவை இடம்பெற்றன. நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் டோகா ஸ்வு வரவேற்புரையாற்றினார்.

இவ்விழாவில் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் கல்விப் புத்தாக்கம் மற்றும் கிராமப்புற மறுசீரமைப்பு ஆய்வுகள் இயக்குநர் பேராசிரியர் தரணிக்கரசு தலைமை வகித்தார். மேலாண்மைத் துறை இணைப் பேராசிரியர் மோதிலால் சிறப்புரையாற்றினார். அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் துறை உதவிப் பேராசிரியர் ஹர்ஷ் மீனா நன்றி கூறினார்.